செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100

சத்யமேவ ஜயதே

நாள்: 12.05.2023

**சுவடியியல் புலம்**
**நடத்தும்**

# தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்களில் சொற்பொருண்மை

**[Semantics Dimensions in Tamil Classical Literature]**

**பயிலரங்கம் - 01**

(24.05.2023 - 30.05.2023)

## அறிவிப்பும் அழைப்பும்

சொல் மற்றும் சொல்லுக்கும் பொருளுக்கும் இடையேயான தொடர்பைத் தொல்காப்பியம் விளக்குகிறது. சொல்லுக்குரிய பொருள் அதன் சொற்பொருண்மைக் கூறுகள், திணை சார்ந்த பண்பாட்டின் அடிப்படையிலும் அமைந்திருப்பதைத் தொல்காப்பியம் சுட்டுகின்றது. அந்த வகையில் செவ்விலக்கியங்களில் உள்ள சொற்கள் கட்டமைக்கப்பட்ட பொருளிலக்கண நெறிகளோடு, மக்களின் பண்பாடு மற்றும் வாழ்வியல் கூறுகளைத் தம்மகத்தே கொண்டு விளங்குகின்றன. செவ்வியல் செய்யுள்களில் கையாளப்பட்டுள்ள சொல்லாட்சி ஆழ்ந்த பொருண்மையை உள்ளடக்கியது.

செவ்விலக்கியங்களில் யாக்கப்பெற்ற சொற்கள் பலவும் புலவர்கள் தாம் கூறவந்த கருத்திற்கு ஏற்பப் பல பொருள் தரக்கூடிய உரிச்சொற்களைக் கொண்டவை; செய்யுளின் தொடர் அமைவிற்கும் ஆழ்ந்த பொருள் விளக்கத்திற்கும் ஏற்பத் தக்கசொற்கள் அமையப்பெற்றவை. தனித்த பொருளுடைய சொற்கள் செய்யுளில் அவ்விடத்து விஞ்சும் சொல் வேறின்றி அச்சூழலுக்கு ஏற்ப அதன் சிறப்புப் பொருண்மையின் குறிப்புச் சொல்லாக மாற்றம் கொண்டு அமையும் சீர்மையுடையன.

சுவடிகளில் எழுதப்பட்ட சொற்கள் பதிப்பிக்கப்படும்போது ஒலி அமைப்பிலும் சொல் அமைப்பிலும் பொருண்மை நிலையில் பல வேறுபாடுகள் உருவாகின்றன. இவ்வாறான பாடவேறுபாடுகளால் செவ்வியல் சொற்களின் பொருண்மை மற்றும் அவற்றின் தனித்தன்மை சிதைந்து பொருள் வேறுபாடு உண்டாகிறது. செய்யுளின்வழி ஆசிரியர் தான் கூறவந்த கருத்துகளை ஒப்பிட்டுக் கண்டறிய அவர்களின்

சொல்லாட்சியும் சொற்பொருண்மையும் செய்யுளில் அமையப்பெற்ற சூழலும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. மேலும் அகம், புறம், திணை அடிப்படையிலும் சொற்பொருண்மைகள் விளக்கப்படுகின்றன. பாடவேறுபாட்டில் உள்ள பாடத்தேர்வினை உறுதி செய்வதற்கு இத்தகைய சொல்லாட்சிகளில் உள்ள நுண்ணிய பொருண்மைகள் மிகவும் பயன்படுகின்றன.

தமிழ் இலக்கிய வரலாற்றில் சொல், பொருள் அதன் மாற்றம் ஆகிய கருத்தியல்களைப் பன்முக நோக்கில் ஆய்ந்து செவ்வியல் இலக்கியச் சொற்பொருண்மையின் விழுமியங்களை எடுத்துரைக்கும் நோக்கத்தோடு **"தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்களில் சொற்பொருண்மை"** என்னும் தலைப்பில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் சுவடியியல் புலம் ஒரு பயிலரங்கினை நடத்தவுள்ளது. இத்துறைசார்ந்த கல்லூரி மற்றும் பல்கலைக்கழக ஆய்வு மாணவர்கள் இப்பயிலரங்கில் பங்கேற்றுப் பயன்பெற அழைக்கப் பெறுகிறார்கள்.

தமிழ்ச் செவ்விலக்கியங்களில் சொற்பொருண்மையின் தனித்தன்மையை ஆராய்ந்து வெளிப்படுத்துவதோடு செம்பதிப்பில் சொற்பொருண்மையின் பயன்பாடுகள் குறித்தான பயிற்சிக் களமாக இப்பயிலரங்கம் அமையும். இலக்கணம் மற்றும் செம்பதிப்புத் துறை சார்ந்த அறிஞர்களைக் கொண்டு செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன வளாகத்தில் 24.05.2023 முதல் 30.05.2023ஆம் நாள்வரை இப்பயிலரங்கு நடைபெற உள்ளது.

## பயிலரங்க விதிமுறைகளும் விவரங்களும் பின்வருமாறு:

1. பயிலரங்கில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை 25.
2. பயிரலரங்கு நடைபெறும் நாட்கள்: 24.05.2023 முதல் 30.05.2023 முடிய 7 நாட்கள்.
3. பயிலரங்கு நேரம்: காலை 10.00 – 01.00 வரை & மாலை 02.00 – 05.00 வரை.
4. பங்கேற்பாளர்கள் தங்குமிடத்தைத் தாங்களே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.
5. பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படி, நாட்படி மத்திய அரசு விதிமுறைகளின்படி வழங்கப்படும்.
6. பங்கேற்பாளர்களுக்குத் தேநீரும், மதிய உணவும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.

7. பயிலரங்கில் கலந்துகொள்ள விரும்புவோர் இதன் கீழுள்ள விண்ணப்பத்தை நிறைவுசெய்து workshopc@cict.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். இப்பயிலரங்கைப் பற்றிய கூடுதல் விவரங்களைத் தெரிந்துகொள்ள மேற்கண்ட மின்னஞ்சல் மூலமாகவே தொடர்புகொள்ள வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் தொலைபேசி/அலைபேசி வழியாகத் தொடர்புகொள்ளக்கூடாது.
8. பயிலரங்கக் கட்டணம் ஏதும் இல்லை.
9. விண்ணப்பம் உரிய வழியாக அனுப்பப்படுதல் வேண்டும்.
10. செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மின்னஞ்சல்/புலனம் வழியாக மட்டும் அழைப்பாணை அனுப்பி வைக்கப்படும்.
11. நிறைவு செய்யப்பெற்ற விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய இறுதி நாள் 19.05.2023. கால தாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்கப்படமாட்டா.
12. இப்பயிலரங்கில் பங்கேற்கத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு 20.05.2023 அன்று மின்னஞ்சல் / புலனம் வழியாகத் தகவல் தெரிவிக்கப்படும்.
13. இப்பயிலரங்கில் பங்கேற்போர் அனைத்து அமர்வுகளிலும் தொடர்ந்து கலந்துகொள்ள வேண்டும். அமர்வுக்குத் தாமதமாக வருவதைத் தவிர்த்தல் வேண்டும். தாமதம் மற்றும் இடைநிற்றல் இருப்பின் நாட்படியும் சான்றிதழும் வழங்கப்பட மாட்டா.
14. பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.

**இயக்குநர்**

# செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை - 600100

# CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai - 600100


सत्यमेव जयते

## தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்களில் சொற்பொருண்மை
**(Semantics Dimensions in Tamil Classical Literature)**

<u>பயிலரங்கம் - 01</u>

(24.05.2023 – 30.05.2023)

### விண்ணப்பப் படிவம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | பெயர் | தமிழ் | | | | | நிழற்படம் |
| | | ஆங்கிலம் | | | | | |
| 2. | பிறந்த நாள் & வயது/ Date of Birth / Age | | | | | | |
| 3. | பாலினம் / Gender | ஆண் | | பெண் | | திருநங்கை | |
| 4. | வகுப்பு / Class | பொது/ General | | இ.பி.வ. O.B.C | | பட்டியல் இனத்தவர்/ SC/ ST | |
| 5. | கல்வித் தகுதி / Educational Qualification | | | | | | |
| 6. | முனைவர் பட்டப் படிப்பில் சேர்ந்த நாள்&ஆண்டு / Date of joining / year in Ph.D. | | | | | | |
| 7. | முனைவர் பட்ட ஆய்வுத் தலைப்பு/ Ph.D. Research Topic | | | | | | |
| 8. | பல்கலைக்கழகம்/கல்லூரி/ நிறுவன முகவரி (தொலைபேசி / மின்னஞ்சல்) / university/ college/ Institute address (Mobile & Email) | | | | | | |
| 9. | இல்ல முகவரி & அலைபேசி எண் (Residential address & Mobile No) | | | | | | |
| 10. | புலன எண் / Whatsapp number | | | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11. | **செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் முந்தைய கல்வியாண்டுகளில் நடத்திய பயிலரங்கில் கலந்து கொண்டீர்களா? ஆம் எனில் விவரம் தருக.** / Did you attend the workshop conducted by the CICT in previous academic years? If yes, please give details | ஆம் | | இல்லை | |

**(கையொப்பம்)**

நாள்:

இடம்:

நெறியாளர் / துறைத் தலைவர்/
முதல்வர்/ பதிவாளர்/இயக்குநர் உரிய முத்திரையுடன்